மாமல்லபுரம், கொக்கிலமேடு, சதுரங்கப்பட்டினம் மற்றும் அகரம் ஆகிய மீனவக் கிராமங்களில் 59 மீனவர்களுக்கு வீடுகள் கட்ட ஆணை வழங்கப்பட்டு, அவற்றில் 39 வீடுகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 20 வீடுகளுடைய கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிகள் தவிர இன்னும் உள்ள ஏனைய மீனவக் குப்பங்களில் வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றவாறு தகுதிவாய்ந்த மீனவர்கள், தகுதிவாய்ந்த இடங்கள் இருக்குமென்று சொன்னால் அந்த இடங்களிலும் வீடுகள் கட்டித் தருவதற்கான நடைமுறைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தளபதி அவர்களுடைய அரசு செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

33—

பூங்கா

***1917—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, காரவள்ளி வனப் பகுதி நுழைவாயிலில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தப் பகுதி காப்புக் காட்டினுள் வருகிறது. காப்புக் காட்டினுள் பூங்கா நிறுவுவது தமிழ்நாடு வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்கீழ் அனுமதிக்கப்படவில்லை. எனவே, காரவள்ளி காப்புக் காட்டுப் பகுதியில் பூங்கா அமைக்கும் வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

முற்பகல் 10–25

திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரவள்ளி காப்புக் காட்டில், கொல்லிமலைக்குச் சுற்றுலா செல்லும் பயணிகள், காரவள்ளியைக் கடந்துதான் கொல்லிமலைக்குச் செல்ல வேண்டும். அப்படிச் செல்கிறபோது காரவள்ளி வனக் காப்புக் காட்டில் வனத் துறையின் மூலமாக சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் பூங்கா அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியின் காரவள்ளி வனப் பகுதியின் நுழைவாயிலில் பல்வேறு வகையான மரங்களும், மூங்கில்களும் ஏற்கெனவே இயற்கையாகவே வளர்ந்து, எழில்மிகு தோற்றத்தை வழங்குகின்றன. காரவள்ளி வனப் பகுதியின் நுழைவாயிலில், ஒரு புதிய பூங்கா அமைக்கப்பட்டால், அப்பகுதியில் இயற்கைச் சூழல் மாறுபடும் என்று பொது மக்களால் கருதப்படுகிறது. மேலும் ஒரு காப்புக் காட்டில் பூங்காவை நிறுவுவது, தமிழ்நாடு வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்கீழ், வனம் சாராத பணியாகக் கருதப்படுவதால், அனுமதிக்கப்படவில்லை. இருப்பினும் கொல்லிமலை அறப்பளீஸ்வரர் கோயிலுக்கு 38 கி.மீ. தூரத்தில் உள்ள ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி சுற்றுலாத் தலத்தில் ஏற்கெனவே ஒரு பூங்கா வனத் துறையால் நிறுவப்பட்டுள்ளது.*

எனவே, காரவள்ளி வனப் பகுதியின் நுழைவாயிலில், பூங்கா அமைக்கும் தேவை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலைக்குத் தினந்தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். சக்திவாய்ந்த கோயில்கள், அறப்பளீஸ்வரர் கோயில், பெரியசாமி கோயில், எட்டுக்கையம்மன் கோயில், கொல்லிப்பாவை ஆகிய கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்கிறார்கள். சுமார், 150 அடி உயரத்திலிருந்து ஆகாய கங்கை, மூலிகை கலந்த நீர்வீழ்ச்சி, நேரடியாகக் கொட்டுகிறது. அதேபோன்று மாசிலா அருவி, நம் அருவி ஆகிய அருவிகளிலிருந்தும் நீர் கொட்டுகின்ற காரணத்தினால், சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகின்றனர். அதனால், காரவள்ளி வனப் பகுதியின் நுழைவாயிலில், வனப் பகுதியின் மூலமாகவே, ஒரு பூங்காவை அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, அது தேவைப்படின், நிச்சயமாக செய்து கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

34—

புதிய திருத்தேர்

***3086—திரு. இரா. காமராஜ்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—